# திருக்குறளில் மேலாண்மையியல்

முனைவர் கோ.ப. நல்லசிவம்
தலைவர், மெய்யியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 010.

**ஆய்வுச்சுருக்கம்**

மேலாண்மையியல் என்பது இன்று எல்லாத் துறைகளிலும் வளர்ந்து வரும் மிக முக்கியமான காரணியாக உள்ளது. தொடக்க காலத்தில் வணிகத்தில் மட்டும் வணிகவியல் மேலாண்மை என்று இருந்த இத்துறை, இன்று மருத்துவம், கல்வி, தொழில், கலை, பொறியியல், கணிப்பொறி, செயற்கை நுண்ணறிவு முதலிய அனைத்து நிலைகளிலும் பரந்து விரிந்துள்ளது. மேலாண்மையியல் அல்லது நிர்வாகவியல் என்னும் சொற்கள் புதிதாக இருந்தாலும் பொருண்மை தமிழுக்குப் புதிதல்ல. ஆதிகாலம் தொட்டு நில மேலாண்மை, நீர்மேலாண்மை, ஆட்சி, அதிகாரம், மக்கள் தொடர்புகள், வணிகம் முதலிய பல நிலைகளில் தமிழ்ச் சமுதாயத்தில் இக்கருத்தும் செயன்மையும் போற்றப்பெற்று நடைமுறையில் இருந்துள்ளன. இன்று நவீன மேலாண்மையியல் குறித்த மெய்யியலோடு திருக்குறளில் இடம் பெறும் மேலாண்மையியல் தொடர்பான பதிவிகளை ஆய்வு செய்வதும் ஒப்பிடுவதும் இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

மேலாண்மையியல், திட்டமிடல், நிர்வாகம், ஒருங்கிணைத்தல், பணியமர்த்தல், கட்டுப்படுத்துதல், ஆளுமைத்திறன், தொழில்நுட்பம், நடத்தை முறைகள்.

**நுழையுமுன்...**

சமூகம், அரசியல், பொருளாதாரம், தனி மனிதன் என்ற எல்லா நிலைகளிலும் நிர்வாகம் என்பது தவிர்க்கவியலாத ஒன்றாக உள்ளது. குறிப்பாக நேர நிர்வாகம், மனித வள நிர்வாகம், குழு நிர்வாகம், குடும்ப நிர்வாகம் போன்றவற்றில் நிர்வாகம் முக்கிய அங்கம் வகிக்கிறது. நிர்வாகம் அல்லது மேலாண்மையியல் என்பதை ஆங்கிலத்தில்

Management என்பர். இதற்கு Manage Men Tactfully என்று விளக்குவர். இதைத் தமிழில் மனிதனைச் சாமர்த்தியமாக நிர்வகித்தல் அல்லது கையாளுதல் எதுவோ அதுவே மேலாண்மை அல்லது சிறந்த நிர்வாகம் என்று பொருள் கொள்ளலாம்.

மேலாண்மையியல் என்பது தனித்துறையாக இன்று வளர்ந்திருக்கலாம். ஆனால் நம்முடைய தமிழிலக்கியங்களில் நிர்வாகம் மற்றும் அது தொடர்பான சிந்தனைகள், கொள்கைகள், தத்துவங்கள், நிர்வாக அமைப்பு முறைகள் ஆகியன தொன்று தொட்டே பேசப்பட்டுள்ளன என்பது வியப்பிற்குரியது. இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் என்ற தலைமைத்துவம் சார்ந்த நிர்வாகத்தை இலக்கணமாக உலகப் பொதுமறையாம் திருக்குறள்தான் தமிழில் முதன்முதலில் தொடங்கி வைக்கிறது. நிர்வாகவியல் கோட்பாடுகளாக இன்று கூட்ஸ், ஹென்றி பயால், மேரி பார்க்கர், ஓடன்ஸ் முதலிய அறிஞர்கள் கீழ்காணும் தத்துவங்களைக் குறிக்கின்றனர்.

1. திட்டமிடல் (Planning)
2. ஒருங்கிணைத்தல் (Organizing)
3. பணியமர்த்துதல் (Staffing )
4. தொழில்நுட்பம் (Technics)
5. கட்டுப்படுத்துதல்(Controlling)
6. நடத்தை முறைகள் (Attitudes)
7. ஆய்வு (Research)
8. இயக்குதல் (Directing)

என்னும் எட்டு அடிப்படையான முறைகளைச் சுருக்கமாக ஆங்கிலத்தில் POSTCARD என்று குறிப்பிடுவர். இவை தவிர தலைமைத்துவம், ஆளுமைத் தன்மை, மேலாண்மை, உளவியல் சார்ந்த நிருவாகவியல் கோட்பாடுகளும் உண்டு. இக்கட்டுரை திருக்குறளுள் இடம்பெறும் நிர்வாகவியல் சார்ந்த கருத்துக்களை முன்வைக்கிறது.

## திருக்குறள்

தமிழர் மெய்யியலின் தனிப்பெரும் சொத்தாக விளங்குவது திருக்குறளாகும். திருக்குறள் சமகாலத்தில் இருந்த சமூக அமைப்பிற்கேற்றவாறு படைக்கப்பட்டிருப்பினும் பல குறட்பாக்கள் காலம் கடந்து நிற்கும் நீட்சியும் எதிர்காலச் சிந்தனையும் உடையதாக இருப்பது வியக்கத்தக்கதாம். தமிழரின் செழுமையான மனவளத்தையும் பண்பாட்டையும் மட்டுமல்லாமல் நிர்வாகத்திறத்தினையும் எடுத்தியம்பும் பெட்டகமாகவும் திகழ்கிறது. அவை இக்காலத்தில் வளர்ந்த கொண்டடே வரும் பல்வேறு விதமான நிர்வாக நுட்பங்களையும் உள்ளடக்கியதாக இருப்பது கூடுதல் வியப்பைத் தருகிறது. தலைமைத்துவம், நீதி நிர்வாகம், ஒருமுகப்படுத்துதல் திறன், தன்னை வெல்லும் திறன், ஆளுமைப்பண்பு என அனைத்தும் திருக்குறளில் நிறைந்திருக்கின்றன.

## திட்டமிடல் (Planning ) மற்றும் ஒருங்கிணைத்தல் (Organizing)

எந்தவொரு செயலுக்கும் திட்டமிடல் என்பதே முதற்பணியாக இருக்க வேண்டும். திட்டமிடல் இல்லாத எதுவும் சரியான பாதையில் சென்று வெற்றியடையாது. எனவே நிர;வாகத்தில் திட்டமிடல் என்பதே முதன்மையாகப் பார்க்கப்படுகிறது. பல்வேறு நிலைகளில் உழைப்பும், பொருளாதார வலிமையும் இருந்தும் ஒரு செயல் தோல்வியடைவதற்கான காரணம் ஒருங்கிணைத்தல் என்பது இல்லாமையே காரணமாக இருக்கிறது. ஒருங்கிணைத்தல் என்பது நிர்வாகத்தில் தலைவராக இருப்பவருக்குக் கட்டாயம் இருக்கவேண்டிய திறனாகும்.

இதனைத் திருக்குறள்,

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**

**துணைவலியும் தூக்கிச் செயல்.** (471)

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்;**

**எண்ணுவம் என்பது இழுக்கு.** (467)

**இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**

**வகுத்தலும் வல்லது அரசு. (385)**

என்னும் குறட்பாக்களில் விளக்குகிறது.

**பணியமர்த்துதல் (Staffing )**

பணியமர்த்துதல் என்பது ஒரு நிறுவனத்தைத் தொடர்ந்து வெற்றிப் பாதையில் கொண்டு செல்ல தேவைப்படும் மனித வளம் ஆகும். மனித வளத்தை முறையாக, திறமையாகப் பயன்படுத்தினால்தான் நிர்வாகம் சிறப்பாக இருக்கும். எனவே சரியான பணிக்குச் சரியான நபரைத் தேர்ந்தெடுத்தல் என்பது இன்றியமையாததாகும். இக்கருத்தை,

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**

**தீரா இடும்பை தரும். (510)**

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல். (517)**

என்ற குறட்பாக்கள் வழி உணரலாம்.

தொழில் நுட்பம் (Technics)

தொழில் நுட்பம் என்பது நிர்வாகச் செயல்பாட்டில் உயிராக இருப்பது. சரியான தொழில் நுட்பம் என்பது காலமறிதல், இடமறிதல், வலியறிதல் என்ற எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகும். எந்த காலத்தில் எந்த இடத்தில் எப்படிப்பட்ட நிலையில் ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்பதைத் தொழில் நுட்பத் திறனே முடிவுசெய்கிறது. இது தொடர்பாக திருக்குறள் தனித்தனி அதிகாரங்களே அமைத்திருப்பது ஈண்டு நோக்கத்தக்கதாம்.

**அருவினை என்ப உளவோ கருவியான்**

**காலம் அறிந்து செயின். (483)**

பொருள்கருவி காலம் வினைஇடனோடு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல். (675)

இதில் இடம் பெறும் கருவியான் என்பதை நேரிடையாகவே தொழில்நுட்பத்திற்குக் கொள்ளலாம்.

## கட்டுப்படுத்துதல் (Controlling)

கட்டுப்படுத்துதல் என்பது ஒரு நிர;வாகத்தின் மிக முக்கியமான பணியாகும். எந்தவொரு செயலையும் அதன் போக்கில் விடாது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்துதல் நிர்வாகத்தின் வெற்றிக்கு வழிகோலும். நிறுவனமோ அமைப்போ எதுவாகிலும் முறையான செயல்பாடுகளைக் கொண்டிருக்கவேண்டும். ஒழுங்கு என்பது ஒவ்வொரு செயலிலும் இருப்பதை உறுதிசெய்வதே கட்டுப்படுத்துதல் என்று பொருள் கொள்ளப்பெறுகிறது. பொருள் உற்பத்தியாகிலும், சேவை சார்ந்த நிறுவனமாகிலும் ஒழுங்கு முறை என்பது மிக அவசியமாகும். தரிகெட்டு ஓடும் எதுவும் சரியான இலக்கை அடைந்ததில்லை. இலாபம் அடையும் போதும், நட்டம் ஏற்படும் போது கட்டுப்படுத்துதல் என்ற ஒன்று இருந்தால்தான் தொடர்ந்து ஒரு நிறுவனத்தை நடத்த முடியும், நட்டத்திலிருந்து மீள முடியும். கட்டுப்படுத்துதலின் அவசியத்தைத் திருக்குறள்,

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை

உள்ளறிவான் உள்ளம் கொளல். (677)

என்ற குறட்பாவினால் அறியலாம்.

## நடத்தை முறைகள் (Attitudes) மற்றும் ஆய்வு (Research)

ஒரு நிர்வாகத்தை அதன் நடத்தை முறைகளும் தொடர்ச்சியான ஆய்வும் தான் நிலைநிறுத்துகிறது எனலாம். நிர்வாகத்தின் செயல்பாடுகளை அடிக்கடி ஆய்வு செய்து அவை சரியான பாதையில் பயணிக்கிறதா அல்லது ஏதேனும் மாற்றங்களைக் கொண்டுவர

வேண்டுமா என்பதை ஆய்வு செய்வது மிக இன்றியமையாததாகும். தேவை என்பதைக் குறித்தே நிறுவனங்கள் செயல்படுகின்றன. அதற்கு மிக முக்கியமான காரணி ஆய்வு செய்வதாகும். தேவை, உற்பத்தி, விற்பனை, நிகர இலாபம் ஆகிய நான்கையும் அவ்வப்போது ஆய்வு செய்வது தொடர் வெற்றிக்கு வழிவகுக்கும். நடத்தை முறைகள் என்பது தொழில் நுட்பத்தோடு நெருங்கிய தொடர்புடையதாகும். காலத்திற்கு ஏற்றாற்போல தொழில் நுட்பத்தை மாற்றிக்கொள்வதும், முறைகளில் மாற்றம் கொண்டு வருவதும் மிக முக்கியமான நடத்தையாகும்.

**செய்வானை நாடி வினைநாடி காலத்தோடு**

**எய்த உணந்து செயல். (516)**

**நாள்தோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்**

**கோடாமை கோடாது உலகு. (520)**

## தலைமைத்துவம் (Leadership)

நிர்வாகம் என்று எடுத்துக்கொண்டால் தலைமை என்பதே அதன் உயிராக விளங்குவது. சிறந்த தலைமையே சிறந்த நிர்வாகத்தை வழங்க முடியும். தலைமை வேலை வாங்குவது மட்டுமல்ல திறம்பட வழிநடத்துவது என்று புரிந்துகொள்ள வேண்டும். அப்பேற்பட்ட தலைமைக்குக்கென்று சில முக்கிய தகுதிகள் உண்டு. அவற்றுள் அறிவு, மன உறுதி, ஆளுமை, செயலூக்கம், எளிமை, சான்றாண்மை, சான்றாக வாழ்வது, நடுவு நிலைமை, உண்மைத்தன்மை. ஒழுக்கம், நேர்மை, நீதி வழுவாமை போன்றன இன்றியமையாதன எனலாம். அவ்வகையில் தலைமைக்குத் தேவையான பண்புகளாகத் திருக்குறள்,

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**

**தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596)**

**அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**

**நன்குடையான் கட்டே தெளிவு. (513)**

**வினைவலியும் தன்வலியும மாற்றான் வலியும்**

**துணைவலியும் தூக்கிச் செயல். (471)**

**அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**

**ஐந்துசால்பு ஊன்றிய தூண். (983)**

என்பதைக் காட்டுகிறது. அனைவரும் முதலாளியாகலாம் ஆனால் அனைவரும் தலைவர்களாக ஆக முடியாது. தலைவர்களாக வேண்டுமானால் மேற்கண்ட தலைமைத்துவப் பண்புகள் அவசியம்.

**தன்னை வெல்லும் நிர்வாகத் திறன்**

புலனடக்கம், தன்னையறிதல், எந்தச் சூழ்நிலையிலும் தன்னிலை தாழாதிருத்தல், தடுமாற்றம் அடையாமல் தற்காத்தல் போன்ற பண்புகள் தாம் ஒருவனைப் புனிதனாக்கும், தன்னையே வெல்ல வைக்கும். அவனே சிறந்த வீரனாவான். அவ்வையார் புலனைந்தும் வென்றான் தன் வீரமே வீரம் என்கிறார். தன்னையறிந்து வென்றவனாலேயே பிறரையும் அன்பால் வெல்ல முடியும். எனவே தன்னை வெல்லும் நிர்வாகத் திறமையே எல்லாவற்றினும் கடினமானது, உயர்வானது.

தலைமைத்துவம் என்ற திறனில் ஒழுக்கம் மிக முக்கியமான காரணியாகும். எப்பேர்பட்ட தகுதிவாய்ந்த மனிதனையும் பணம், மது, மாது, சூது முதலியன சாய்த்துவிடும். தலைவன் எந்தவொரு தவறான நாட்டத்திலும் ஈடுபடலாகாது. அப்படி ஒரு மறை குணம் இருக்குமாயின் அதனை மிக எளிதாக கீழ் இருப்போர் மற்றும் போட்டியாளர்கள் பயன்படுத்தி அவனையும் அவன் சார்ந்த நிறுவனத்தையும்

அமைப்பையும் அழித்து விடுவர். எனவே இதில் கவனமாக இருப்பது தன்னை வெல்லும் திறனில் அவசியமாகப் பார்க்கப்படுகிறது. மிகப்பெரிய சாம்ராஜியங்கள் கூட மேற்கண்ட தீய ஒழுக்கத்தால் சரிந்த வரலாறுகள் எல்லா நாட்டிலும் உண்டு. இதனைத் தலைவன் நன்கு உணர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒரு மனிதனுடைய கருவி கரணங்களை ஒருமுகப்படுத்தும் பொழுதுதான் அளப்பரும் ஆற்றல்கள் அவனிடத்திலிருந்து வெளிப்படுகின்றன. உலகியலியலும் அருளியலிலும் ஒருமுகப்படுத்தும் திறனே வெற்றியைத் தேடித்தரும். நிர்வாக வெற்றிக்கும் இந்த திறன் மிகவும் அவசியமானதாகும்.. இதனை,

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்**

**என்றும் இடும்பை தரும். (138)**

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து. (126)**

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணிய ராகப் பெறின். (666)**

**கதம்காத்து கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி**

**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. (130)**

என்ற குறட்பாக்கள் வழி உணரலாம்.

**ஆளுமைத்திறன்**

நிர்வாகவியலில் மிக முக்கியக் கூறாக விளங்குவது ஆளுமைத்திறனாகும். இதனை ஆங்கிலத்தில் Personality என்று அழைப்பர். ஆளுமைத்திறன் என்பது புறம் சார்ந்தது

மட்டுமல்ல. ஒருவரின் அகம் சார்ந்த குணநலன்களின் அமைப்பும் சேர்ந்தது என்றால் அது மிகையில்லை. இன்று பலர் மிடுக்கான உடை உடுத்துவது, தன்னை உயர்வாகக் காட்டிக்கொள்வது, விலையுயர்ந்த பொருள்களைப் பயன்படுத்துவது மட்டுமே என்று கருதும் நிலை பலரிடம் உள்ளது. அது மட்டுமே ஆளுமைத்திறன் ஆகாது. சிலர் பிறரை அடக்கி ஆள்வது, கோபமாகக் காட்டிக்கொள்வது, வேலை வாங்குவது ஆளுமைத்திறன் என்று நினைக்கின்றனர். இவையும் ஆளுமைத்திறன் ஆகாது.

ஆளுமைத்திறனுக்கு அடிப்படை நடுவு நிலைமையாகும். சமன்செய்து சீர் தூக்கும் கோல் போல் ஒரு தலைவன் இருக்க வேண்டும். ஆளுமைத்திறன் என்பது அறிவுப்பூர்வமாக ஜனநாயகமாக வேலைபார்த்தலும் வேலை வாங்குதலும், பிரச்சனைகளைத் திறம்பட எதிர்கொள்வதுமே ஆகும். பிரச்சனைகளைத் தள்ளிப்போடுவதும், அஞ்சுவதும், தவறான முறைகளால் சமாளிப்பதோ அல்ல ஆளுமைத்திறன். தன்னுடைய பணியாளர்களைக் காப்பாற்றுவதும் உரிய தவறுகளை உடனடியாகச் சுட்டிக்காட்டித் திருத்துவதும் ஆளுமைத்திறன்களாகக் கொள்ளப்படுகின்றன. மேலும்,

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**

**மலையினும் மாணப் பெரிது. (124)**

**எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்**

**மெய்ப்பொருள் காண்பது அறிவு. (355)**

என்பன ஆளுமைத்திறனுக்கு வேண்டிய அறிவாகும். ஒரு செயலைப் புறநிலையில் ஆராய்வது மட்டுமல்லாமல் அக நிலையிலும் ஆராய்வதே சிறந்த ஆளுமைக்கு அழகாகும். ஆள்வினையுடைமை என்று இதற்குத் தனி அதிகாரமே திருக்குறளில் உண்டு. இவை தவிர அவையறிதல். தெரிந்து செயல் வகை, தீவினை அச்சம், நட்பு, அறிவுடைமை, அன்புடைமை, அருளுடைமை என அனைத்துமே ஆளுமைத்திறனை வளர்க்கும் குணநலன்களாகும்.

**நிறைவாக....**

நிர்வாகத்திறன் என்பதை அறிவும், உழைப்பும் சூழலுமே தீர்மானிக்கிறது, வளர்க்கிறது. பிறப்பினால் வருவதல்ல. ஒவ்வொரு தனிமனிதனும் ஆளுமைத்திறன் என்றால் என்ன, அதை எப்படி வளர்த்துக் கொள்வது எனத் திருக்குறள் பல்வேறு வழிமுறைளைக் குறிப்பிடுகிறது. எதையும் ஆராய்ந்து வடிகட்டி எடுத்துக்கொள்ளும் அறிவைத் தான் இன்று மேலாண்மை என்கிறோம். இவை இன்றும் பல்வேறு கொள்கைகளாக மேலை நாட்டினரால் கொண்டாடப்பெறுகிறது எனில் திருக்குறளின் தொலைநோக்குச் சிந்தனை தெளிவாகப் புரிகிறது.

புதுமையைப் போற்றுவதும் பழமையை அதன் அடித்தளமாக இருப்பதை உணர்வதும் அவசியம். திருக்குறள் தத்துவமாக, இலக்கியமாக, அறநூலாக மட்டும் தமிழ்ச் சமூகத்தில் பார்க்கப்பட்டு வருகிறது. இந்நிலை மாறவேண்டும். ஆய்வுகள் நயம் பாராட்டுதலோடு ஒரு தொகுப்பாக அமைந்து விடக்கூடாது. திருக்குறளில் மேலாண்மையியல் மட்டுமல்ல அறிவியல், அரசியல், மானுடவியல், எதிர்காலவியல், சூழலியல், உழவியல் முதலிய பல கூறுபாடுகளை இன்னும் நுணுகி ஆராயக் களங்கள் உள்ளன. ஆய்வாளர்கள் உழுத சால் வழியே உழுது கொண்டிராமல் புதிய புதிய கோணங்களில் இலக்கியங்களை அணுகப் பழக வேண்டு . இவை இன்றும் பல்வேறு கொள்கைகளாக மேலை நாட்டினரால் கொண்டாடப்பெறுகிறது எனின் திருக்குறளின் தொலைநோக்குச் சிந்தனை தெளிவாகப் புரிகிறது.

சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க

சொல்லில் பயன்இலாச் சொல். (200)

---------

**துணைநூற்பட்டியல்**


1. திருக்குறள் – பரிமேலழகர் உரை – சாரதா பதிப்பகம், சென்னை -2014
2. Brown, Fred R. (1978), Management: Concepts and Practice. Washington, D.C: National Defense University.
3. Donnelly, J. H., Gibson, J. L., & Ivancevich, J. M. (2000), Fundamentals of management. New York: McGraw Hill Companies/Primis Custom Pub.
4. Gupta, N. S. (1979), Principles and practice of management. New Delhi: Light & Life Publishers.
5. Koontz, H., & Weihrich, H. (2015), Essentials of management: An international, innovation, and leadership perspective., New Delhi : McGraw-Hill Education (India) Private Limited.
6. Malhotra, R. K., Nachhattar, S., & Sharma, S. D. (1998), Essentials of management. Kuala Lumpur: Cresent News.
7. Newman, W. H. (1970), Administrative action: The techniques of organization and management. London: Pitman
8. இணைய மூலங்கள்

    1. http://www.freebookcentre.net/business-books-
    2. tps://ebooks.lpude.in/commerce/mcom/term
    3. https://www.nios.ac.in/media/documents